2018

No. of Printed Pages : 6

2018

201438

**8061**

*Register Number* | | | | | | |

இரண்டாமாண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** (அ) **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

1. ஐந்து + ஆயிரம் - சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

2. பாற்குடம் - இத்தொகை நிலைத் தொடரை விரித்தெழுதி, எவ்வகைத் தொகைநிலைத் தொடர் என்பதை எழுதவும்.

3. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.
- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைக் கூறி விளக்குக.

4. செய், வை, பண்ணு என்னுஞ் சொற்கள் தன்வினைச் சொற்களோடு சேர்ந்து பிறவினைச் சொற்களாவதற்குச் சான்று தருக.

5. தெரிநிலை வினைமுற்று என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

6. ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.
-இக்குறட்பாவை உரைநடைப்படுத்துக.

[ Turn over

7. சிறுகதை எழுத வகுப்பறையில் நீவீர் மேற்கொள்ளும் பயிற்சிகளைக் கூறுக.

8. 'சிலந்தி சிரித்தது' என்னும் சிறுகதையில் வருகின்ற ஓவியத்தின் பொருளையும் எழுதப்பட்டிருந்த வரிகளையும் கூறுக.

9. 'இது பொறுப்ப தில்லை - தம்பி!
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் - அண்ணன்
கையை எரித்திடுவோம்'.
- என்னும் பாடலடிகளில் வெளிப்படும் பாரதியின் உணர்வை வெளிப்படுத்துக.

10. இலக்கண முறையில் மரூஉ என்று எதனை அழைக்கிறோம் ? எடுத்துக் காட்டு தருக.

**(ஆ) எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **5x4=20**

11. தொகா நிலைத்தொடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

12. பழம் + கடை, சொல் + தொடர் சேர்த்தெழுதிப் புணர்ச்சி விதி கூறுக.

13. பின்வரும் பாடலில் இடம் பெற்றுள்ள நயங்களைத் தொகுக்கவும்.

தத்தும் பாய்புனல் முத்தம் அடைக்கும்
சாலை வாய்க்கன்னல் ஆலை உடைக்கும்
கத்தும் பேரிகைச் சத்தம் புடைக்கும்
கலிப்பு வேலை ஒலிப்பைத் துடைக்கும்
நித்தம் சாறயர் சித்ரம் படைக்கும்
நிதியெல் லாந்தன் பதியில் கிடைக்கும்
மத்தம் சூடும் மதோன்மத்த ரான
மருதீசர் மருதூர் எங்கள் ஊரே.

**(-முக்கூடற்பள்ளு)**

14. பேச்சாற்றல் சிறக்க அ.கி. பரந்தாமனார் கூறும் கருத்துகளை எழுதுக.

15. வீட்டில் இடம்பெறத்தக்க நூல்களின் தன்மைகள் மற்றும் அவற்றிற்கான காரணங்களை விளக்குக.

16. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

மலையும் கடலும் காடும் கொண்ட உலகம் பிறந்து அளவற்ற காலம் ஆகிவிட்டது. காய்கின்ற கதிரவன் சுழன்றபோது சிதறி வந்த ஒரு பகுதி, உருண்டை வடிவம் பெற்றுத் தானும் சுழன்றது. நெருப்புக் கோளமாக இருந்த அது, காலப்போக்கில் குளிர்ந்தது. நீரும், நிலமும் தோன்றின. உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற உயிர்க்கோளமாக அது மாறுவதற்குச் சுமார் நூற்றைம்பது கோடி ஆண்டுகளுக்கும் மேலானது. உயிர்கள் முதன் முதலில் நீரில் தோன்றின. அவை நாளடைவில் நிலத்திலும் பரவின. பின்னர், அவை படிப்படியாக நிற்பன, ஊர்வன, பறப்பன, நடப்பன, மனிதன் என வளர்ச்சி நிலைகளைப் பெற்றன. அண்டத்தில் நிலவும் சந்திரன், செவ்வாய் முதலான கோள்களில் உயிரினங்கள் வாழ இயலா. நிலத்தில் மட்டுமே உயிர்கள் வாழ இயலுமாதலால் அதனை உயிர்க்கோளம் என வழங்குகிறோம்.

(1) சூரியனிலிருந்து பிரிந்த நெருப்புக்கோளம் எது ?

(2) உயிர்க்கோளம் என்று ஏன் அழைக்கிறோம் ?

(3) உயிரினங்கள் தோன்றிய வளர்ச்சி நிலைகளை எழுதுக.

(4) இப்பத்திக்கான தலைப்பு ஒன்று தருக.

17. மணற்கேணி, தேன்கூடு, மனமகிழ்ச்சி, நாடிச் சென்றான்

- இவற்றை வேற்றுமை நிலைத்தொடர் அல்வழித் தொடராக வேறுபடுத்திக் காட்டி காரணம் கூறுக.

18. 'சிலந்தி சிரித்தது' என்னும் கதையானது சிறுகதைக்கான இலக்கணத்தைப் பெற்று மிளிர்கிறது என்பதை நிறுவுக.

## பகுதி - ஆ

II. (அ) **அனைத்து வினாக்களுக்கும்** ஒவ்வொன்றிற்கும் **100 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **10x2=20**

**19.** பாடத்திட்டத்தில் இடம்பெற வேண்டிய ஆசிரியருக்கான செய்திகளைத் தருக.

**20.** வண்மை, வன்மை - இச்சொற்களைக் கற்பிக்க நீவீர் கையாளும் தொடர்களைக் கூறுக.

**21.** ஒளி என்னும் பொருள் தரும் குறைந்தபட்சம் நான்கு சொற்கள் எழுதுக.

**22.** நாகப்பட்டினம் - என்னும் சொல்லுக்குள்ளிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.

**23.** மனப்பாட அறிவின் தேவையைக் கூறுக.

**24.** பொய்யாமை அன்ன புகழ்இல்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.
-அசை பிரித்து வாய்பாடு தருக.

**25.** 'பத்துப்பாடல், படித்துப்பார்' - வல்லினம் மிகுந்தமைக்கான காரணத்தைக் கூறுக.

**26.** கண்ணகி சேரநாட்டை அடைந்து தெய்வீகமுற்றது சிலப்பதிகாரத்தில் சொல்கிறது.

தீண்டாமை மனிதனையெல்லாம் மிருகமாக மாற்ற வைக்கும்.

-இத்தொடர்களிலுள்ள பிழைகளை நீக்கி எழுதுக. இப்பிழைகள் ஏற்பட்டமைக்கான காரணம் என்ன ?

27. இணையத் தொடர்பைப் பெற ஒன்றிணைக்க வேண்டிய பொருள்களை வரிசைப்படுத்துக.

28. தொடக்க வகுப்புகளில் கேட்டல் திறனை எவ்வாறு மதிப்பீடு செய்வீர் ?

(ஆ) **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும்.

**5x4=20**

29. கலைத்திட்டத்தின் தேவையை விவரிக்கவும்.

30. நீவீர் அறிந்த வேர்ச்சொற்கள் இரண்டினைக் கூறி அவற்றினின்று பல சொற்களை உருவாக்கிக் காட்டுக.

31. கதைப்பாடல் உத்தியைப் பின்பற்றி நீவீர் கற்பித்த முறையைக் கூறுக.

32. மாணவர்கள் செய்யும் ஒலிப்புப் பிழைகள் எட்டினை வரிசைப்படுத்துக.

33. மொழிப்பாடத்தில் மாணவர்கள் செய்யும் பிழைகளைக் களைய ஆசிரியர் செய்ய வேண்டுவன யாவை ?

34. கணினியில் பயன்படுத்தப்படும் தமிழ் விசைப் பலகைகளின் வகைகளைக் கூறி, அவற்றுள் எவ்வகையினை நீவீர் பயன்படுத்துகிறீர் என்பதை விளக்கவும்.

35. கணினிக் கல்விப் பாடத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் என்ன செய்ய வேண்டும்?

36. புறவயத்தேர்வை உருவாக்கும்பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய கருத்துகளைத் தருக.

[ Turn over

## பகுதி - இ

**III.** ஒவ்வொரு வினாவிற்கும் **500 சொற்களுக்கு மிகாமல்** விடையளிக்கவும். **2x10=20**

**37.** (அ) பேராசிரியர் தவே தலைமையில் உருவாக்கப்பட்ட ஐந்தாம் வகுப்பு மொழிப் பாடத்திற்கான திறன்பகுதி, திறன்களை நடைமுறையிலுள்ள ஐந்தாம் வகுப்புத் திறன் பகுதிகளோடு ஒப்பிடுக.

**அல்லது**

(ஆ) மாணவர்களிடம் படைப்பாற்றலைப் பெருக்க மேற்கொண்ட உத்திகளைக் கூறி, அவர்களிடம் கண்டுணர்ந்த படைப்பாக்கத் திறன்கள் சிலவற்றை விளக்குக.

**38.** (அ) கணினியில் பயன்படுத்தப்படும் தமிழ்மென் பொருள்கள் பற்றி விளக்கி எழுதுக.

**அல்லது**

(ஆ) அளவீட்டிற்கும் மதிப்பீட்டிற்குமுள்ள வேறுபாட்டினை விளக்கி, இன்று நடைமுறையில் பின்பற்றப்படும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறையின் பயன்களை விவரிக்கவும்.

-o0o-